மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரிய வகையில் எவ்வாறு அந்த மாற்றத்தை அளிக்கலாம் என்று முன் வந்தால் அதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறுகிய கால வினா.

பத்திரப் பதிவுக் கட்டணம்.

1—

*8463 திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் பத்திரப் பதிவுக் கட்டணம் அதிகமாக இருப்பதால் நிறைய பேர் அண்டை மாநிலமான கேரளாவிற்குச் சென்று பத்திரம் பதிவு செய்வதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) பதிவுக் கட்டணம் எல்லா இடங்களிலும் ஒரு சதவீதம் தான். கேரளாவில் பதிவுக் கட்டணம் ஒரு சதவீதம். தமிழ்நாட்டில் ஒரு சதவீதம் தான். முத்திரைக் கட்டணம் தான் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. அப்படி முத்திரைக் கட்டணம் கேரளாவில் அதிகபட்சமாக 5 சதவீதம். தமிழ்நாட்டில் முத்திரைக் கட்டணம் சென்னை, கோவை, திருச்சி, மதுரை, சேலம், நகரங்களில் 8 சதவீதமும், சில இடங்களில் 7 சதவீதமும் உள்ளது. சர்சார்ஜ்—மேல்வரி கேரளாவில் 5 சதவீதம் இருக்கிறது கேரளா மாநகரில். மற்ற இடங்களில் 4 சதவீதம் இருக்கிறது.

முற்பகல் 10-40

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பொதுவாக முத்திரைக் கட்டணம் அதிகமாக இருப்பதால், நிறைய பேர் கேரளாவிற்குச் சென்று அங்கே ஓர் 5 சென்ட் நிலத்தை உடனடியாக வாங்கி அப்போதே பத்திரத்தைப் பதிவு செய்து கொள்கிறார்கள். இங்கே, நிலத்தினுடைய மதிப்புக்குத்தான் பதிவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால், அங்கே 47-ஏ என்கிற பிரிவைப் பயன்படுத்தி, குறைந்த கட்டணத்திலே பதிவு செய்து கொண்டு வருகிறார்கள். அதனால், தமிழக அரசுக்கு மிகப் பெரிய வருவாய் இழப்பு

1992 பிப்ரவரி 5]

ஏற்படுகிறது அப்படி, கேரளா போன்ற மாநிலங்களில் பதிவு செய்யும் பத்திரத்தை இங்கேயுள்ள சார் பதிவு அலுவலகங்களில் 'என்ட்ரி' போடக் கூடாது என்கிற ஒரு சட்டத்தை அரசு கொண்டு வந்தால், அதன் மூலம் அப்படிப்பட்ட பதிவைத் தடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். அதை அரசு செய்ய முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு வந்த பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள், இப்படி பதிவுத் துறையிலே இருக்கிற பல குறைபாட்டினால் நமக்கு வர வேண்டிய பணம் அண்டை மாநிலங்களுக்குச் செல்வதை அறிந்து, இதைப்பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டு இருக்கிறார்கள். அந்த உத்தரவின்படி, மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி, இங்கேயே பதிவு செய்ய வேண்டுமென்று சொன்னால் மட்டும் போதாது ; அங்கே பதிவு செய்தாலும், அந்தப் பதிவுக் கட்டணத்தை இங்கே கொடுக்க வேண்டுமென்று சொன்னால் மட்டும் போதாது. ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 1908 என்பது மத்திய அரசினுடைய சட்டம். அந்த மத்திய அரசின் சட்டத்தை நாம் நினைத்தபடி திருத்த முடியாது. அதிலே 28-வது விதியின்படி, நம்முடைய மாநிலத்தில் எங்கேயாவது ஓரிடத்தில் நிலம் இருந்தால், அதே போல் கேரளாவிலும் நிலம் இருந்தால், கேரளாவில் பதிவு செய்து கொள்ளலாம் என்று இருக்கிறது. அப்போது நமக்கு வர வேண்டிய வரி வராமல் போய் விடுகிறது. ஆக இன்றைக்கு இருக்கிற சட்டப்படி, அங்கே பதிவு செய்தாலும், இங்கே அதைச் செலுத்த வேண்டும் ; அங்கே பதிவு செய்வதற்கும், இங்கே பதிவு செய்வதற்கும் உள்ள விகிதாச்சாரத்தை இங்கே ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்று இருக்கிறது. அதை யாரும் செய்வதில்லை. இதை நம்முடைய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆய்வு செய்த பிறகு—ஒரு 3 இடங்களில் முதலில் ஆய்வு செய்தார்கள் ; அதிலே ஏறக்குறைய ஓராண்டில் 2 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, மொத்தமாக எல்லா இடங்களையும் பார்த்தால், ஒரு வருடத்திற்கு 6 கோடி ரூபாய் வரவேண்டிய பணம் வராமல் போய் விடுகிறது என்பது இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது— அதைத் தடுத்து நிறுத்துவதற்கு எல்லாவிதமான நடவடிக்கையையும் இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் துணைத் தலைவர்.

பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து வாகனங்களை அண்டை மாநிலங்களிலிருந்து வாங்கி வரும் போது, வரி ஏய்ப்புச் செய்கிறார்கள் என்பதைத் தடுப்பதற்காக நுழைவு வரி என்ற வகையிலே இந்த

அரசு முடிவெடுத்து சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது. அதே போன்று, அண்டை மாநிலங்களில் பத்திரத்தைப் பதிவு செய்து, முத்திரைக் கட்டணத்தை ஏமாற்றியவர்களிடமிருந்து, அந்தத் தொகை வேறுபாடு எவ்வளவு என்பதைக் கண்டறிந்து, அதை வசூலிப்பதற்கு தனிப்பட்ட முறையில், தக்க சட்டமுன்வடிவை இந்த அவையில் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் இருக்கிற வித்தியாசத்தைப் பார்த்து, இங்கே வசூல் செய்வதற்கு இன்றைக்கு அதிகாரம் இருந்தாலும், அதை முறையாக நிறைவேற்ற முடிவதில்லை. ஏனென்றால், கேரளாவில் இருக்கிற அதிகாரிகள், அங்கே யார் யார் பதிவு செய்தார்களோ, அந்த விவரத்தை இங்கே நமக்கு கணக்கு காட்டவேண்டுமென்று இருக்கிறது. அவர்கள் அவ்வாறு கொடுக்காவிட்டால், ஏன் கொடுக்கவில்லை என்று கேட்பதற்கும் இந்த அரசுக்கு அதிகாரம் இல்லை. அப்படி இல்லாததினால், யார் யார் அங்கே பதிவு செய்தார்கள் என்பது நமக்குத் தெரியாமல் போய்விடுகிறது. அதற்காகத்தான், எந்தெந்த மாநிலத்திலே நிலம் இருக்கிறதோ, அந்தந்த மாநிலத்திலேயே பதிய வேண்டுமென்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவர முடியுமா என்பதை இந்த அரசு யோசித்து, ஒரு முடிவெடுக்கும். இன்றைக்கு இருக்கிற சட்டம் சென்ட்ரல் ஆக்ட். ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 1908 என்பது மத்திய அரசினால் போடப்பட்ட சட்டம். மத்திய அரசிடமிருந்து அனுமதி வாங்கி, ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு இந்த அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் குறிப்புகள்.

(அ) தஞ்சை காயிதே மில்லத் மாவட்டங்களில் நேரடி நெல் கொள்முதலிலுள்ள இடர்பாடுகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசாங்கத்தின் கவனத்திற்கு .. (குறுக்கீடு).

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..